செ.வெ.எண்.1044 செய்திவெளியீடு தேதி:29.11.2010.

# தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட குடியிருப்புகள் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி திட்டம் (MUDP), புறநகர் வளர்ச்சி திட்டம் (TNUDP) ஆகியவற்றின் கீழ் குடியிருப்பு மனைகள் அவ்வப்போது ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு வாரிய விதிமுறைகளின்படி கிரயப்பத்திரம் வழஙகப்பட்டு வருகிறது. குடியிருப்பு மற்றும் மனை ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு கிரயப்பத்திரம் வழங்க சிறப்பு முகாம்களும், சிறப்பு ஏற்பாடுகளும் அந்தந்த திட்டப்பகுதியில் நடைபெற்று வருகின்றன.

குடியிருப்புகள் மற்றும் மனைகள் ஒதுக்கீடு பெற்று கிரயப்பத்திரம் பெற தகுதியானவர்கள் நடை பெற்று வரும் சிறப்பு முகாம்களில் வாரிய அதிகாரிகளிடம் உரிய படிவத்திலான விண்ணப்பத்துடன், ஒதுக்கீட்டாணை, கிரயத் தொகை செலுத்திய ரசீதுகள் , உணவு பங்கீட்டு அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, மின்கட்டணம் அட்டை மனைக்கு கடன் பெற்றிருந்தால் அதற்கான தடையின்மை சான்று ஆகியவற்றின் அசல் பிரதிகள் மற்றும் நகல்கள் ஆகியவற்றை சமர்ப்பித்து தங்களுடைய கிரய பத்திரனைப் பெற்றுக் கொள்ளலாம். முகாம்களில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கத் தவறியவர்கள் சம்மந்தப்பட்ட எஸ்டேட் அலுவலங்களில் விவரங்களை நேரில் வழங்கி கிரயப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

ஒம்/–A.இராமலிங்கம்

தலைவருக்காக
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்
சென்னை – 600 005.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9